

# கொட்டைப் பாக்கில் விநாயகர் செய்வது எப்படி?

## சொல்லித் தருகிறார் பூமா!

வணக்கம்! என் அருமை வாசக, வாசகிகளே. வரும் மாதம் விநாயகர் சதுர்த்தி வருகிறது. நாம் கடவுளில் முதலில் வணங்குவது பிள்ளையார்தான். நாம் செய்யும் எந்த வேலையையும் முதலில் தொடங்கி ஆரம்பிக்க பிள்ளையார் சுழிதான் போடுவோம். பிள்ளையாரை வணங்குவது சிறு குழந்தை முதல் பெரியோர்வரை அனைவருக்கும் பிடிக்கும் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. எதற்காக பிள்ளையாருக்கு இத்தனை உதாரணம், சொல்ல வேண்டிய விஷயத்தைச் சொல்லாமல், எதற்கு இத்தனை இழுபறி என்றுதானே கேட்கிறீர்கள். விஷயம் இருக்கிறது. வாசகிகளாகிய நீங்கள் எல்லோரும் ஓவியம் வரையக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தாயிற்று. எந்த ஓவியத்துக்கும் பிள்ளையார்தான் ரோல் மாடல் என்பதை ஓவியர்கள் எளிதில் ஒப்புக் கொள்வார்கள்.

சரி, பிள்ளையார் சதுர்த்தியில் நாம் களிமண்ணால் நம் கைகளாலேயே விநாயகர் சிலை செய்து வழிபடுவது அந்தக் காலம். நாளடைவில் களிமண்ணால் செய்த சிலையை வாங்கி வழிபட்டு வருகிறோம். இன்று உங்களுக்கு எடுக்கப்படும் பாடம் 'கொட்டைப்பாக்கு விநாயகர்' சாட் பேப்பரில் விநாயகர் வரையலாம். அது எப்படி, கொட்டைப்பாக்கில் விநாயகர் வரைவதா? அல்லது ஒட்டுவதா? என்று ஒருவர் கேட்பது புரிகிறது. சொல்வதை முழுவதும் கவனித்துக் கொண்டு பின்பு சந்தேகம் கேளுங்கள். முடிந்தவரை சந்தேகமில்லாமல்தான் சொல்லிக் கொடுக்கிறோம். சரி, எங்கே நோட்ஸ் எடுத்துக் கொள்ளுங்கள். முதலில் அதற்குத் தேவையான பொருட்கள் என்னென்று சொல்லிவிடுகிறேன்.

**தேவையான பொருட்கள்**

கொட்டைப்பாக்கு என்றதும் நம் ஊர் பாட்டிகள் வாயில் போட்டு மெல்லும் அந்த சின்னக் கொட்டை பாக்கு கிடையாது. கும்பகோணம் கொட்டைப்பாக்கு. இது பெரியதாக இருக்கும், படத்தில் காட்டிய படி. எம்சீல் பாக்கெட்1. தேவையான வண்ணங்கள் (பேப்ரிக் பெயிண்ட்), பிரஷ், பெவிகால், ஒரு கூர்மையான பென்சில் (அ) கட்டர், வார்னிஷ், சிறிது சாக்பவுடர் இவை எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள். முக்கியமாக கட்டர் ஷார்ப்பாக இருக்கிறதா? என்று பார்த்துக் கொள்ளுங்கள்... அடுத்தது, எப்படிச் செய்வோம் என்று பார்ப்போம். அதற்கு முன், பிள்ளையாரை மனதிற்குள் வேண்டிக் கொள்ளுங்கள்.

**செய்முறை**

முதலில் எம்சீலையும் கொஞ்சம் சாக்பவுடரையும் நன்கு கலந்து கொள்ளுங்கள். கலப்பு சரியில்லையென்றால் வெடிப்பு ஏற்பட்டுவிடும். இரண்டையும் கலந்து கொண்டீர்களா? இவை சப்பாத்தி மாவு போன்று இருக்கும் என்று நினைக்கலாமே தவிர, அவற்றைப் போலவே மாவைப் பிசைந்து, இரண்டு மணி நேரம் கழித்து பிள்ளையார் செய்ய முடியாது. எம்சீலையும், கொஞ்சமே கொஞ்சம் சாக்பவுடரையும் கலந்து கொண்டவுடனேயே வேலையைத் தொடங்கலாம். முதலில் பிள்ளையாரின் தலைப்பகுதி, சிறிய பந்துக் கோலியைவிடச் சிறியதாக, ஏனெனில் கொட்டைப்பாக்கு விநாயகர் என்பதால் சிறிய பிள்ளையாரை உருவாக்க வேண்டும். எனவேதான் மிகச் சிறிய பந்து உருண்டை ஒன்றை உருட்டிக் கொண்டு கொட்டைப்பாக்கின் நடுப்பகுதியில் சற்று முன்நோக்கி அங்கு பெவிகால் தடவி, அவ்விடத்தில் அச்சிறு உருண்டையை வைக்கவும். ஒன்றிற்கு மூன்று முறை கூட படித்துச் செய்யுங்கள். அடுத்ததாக, பிள்ளையாருக்கு காது செய்ய வேண்டும். இதற்கு இரண்டு சிறு உருண்டைகளை உருட்டிக் கொள்ளுங்கள். பின்பு நம் உள்ளங்கையில் வைத்து தட்டுங்கள். உருண்டை அகலமாக வந்தவுடன், கட்டரை வைத்து அழகான காதை கட் செய்து, முன்பு கொட்டைப்பாக்கில் பொருத்திய சிறு உருண்டையின் இருபுறமும் ஒட்டவைக்க வேண்டும்.

ஒவ்வொரு முறை ஒட்டும்போதும் பெவிகால் போட வேண்டும். அடுத்ததாக சற்றுப் பெரிய உருண்டையை உருட்டி சற்று அழுத்தி வயிறாகக் கொண்டு தலைக்குக் கீழ் ஒட்டியபடி வைக்கவும். இப்பொழுது பார்த்தாலே அழகாகத் தெரியும். அடுத்ததாக மிக முக்கியக் கட்டம் தும்பிக்கை. எம்சீலையும், சாக்பவுடரையும் அவ்வப்போது கூட கலக்கிக் கொள்ளுங்கள். உடனே பயன்படுத்திவிடுங்கள். மாவை எடுத்துக் கொள்ளுங்கள், உருண்டையாக இல்லாமல் நீளமாக உருட்டுங்கள். நன்றாகக் கவனியுங்கள். மேற்புறம் அகலமாகவும் கீழ்பகுதி வர வரக் குறுகியதாகவும் அமைய வேண்டும். அதே நேரம் நீளமாகவும் இருக்க வேண்டும். சரியாக வரவில்லையென்றால் மீண்டும் நிதான மாக செய்யுங்கள். அடுத்தது, தலைப்பகுதியில் இருந்து வயிறுப்பகுதி வரை நீண்டிருக்கும் தும்பிக்கையை ஒட்டுங்கள். அழகான பிள்ளையார் ஒன்று தயாராகிவிட்டது. இறுதியாக கை, கால் வைத்தால் போதும். 2 சிறு உருண்டைகளை எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொன்றையும் நீளமாக உருட்டிக் கொள்ளுங்கள்.

முதலில் அகலமாகவும், முடிவில் சற்றுக் குறுகியதாகவும் இருந்தாலே போதும். முனையை மட்டும் சற்று அழுத்தி, கட்டரின் உதவியோடு வரிவரியாய்க் கோடு போடுங்கள். அழகான கைகள் ரெடி. உங்கள் விருப்பம் போல் கைகளைத் தோள் பட்டையில் இருந்து தும்பிக்கை தொடுவதைப் போலவோ, வயிற்றைப் பிடிப்பது போலவோ வைத்துவிடுங்கள். அடுத்ததாக கால், இதற்கும் 2 சிறு உருண்டைகளை நீளமாக உருட்டிக்கொண்டு கைகளைப் போலவே செய்து, முனையை சிறிது அழுத்தி கட்டரால் வரிவரியாகப் போடுங்கள். பின்பு வயிற்றின் கீழ் முனையிலிருந்து கால்களை ஒன்றன் மீது ஒன்று சாய்த்து (படத்தில் காட்டியபடி) வையுங்கள். அழகான கால்களும் ரெடி. அடுத்ததாக, கூர்மையான பென்சிலின் உதவியால் பிள்ளையாருக்கு விபூதிப் பட்டையும், வயிற்றின் நடுவில் ஒரு புள்ளியும் வைத்துவிடுங்கள். நன்கு காய்ந்தவுடன் நமக்கு விருப்பமான வண் ணங்களில் பிள்ளையாரை கலர்ப் பிள்ளையாராக்கிவிடலாம். முக்கியமாகப் பிள்ளையாருக்குக் கண்கள் இருக்கும் விதத்தில் கருப்பாக 2 புள்ளிகளை தலையில் வைத்து, பின் விபூதிப் பட்டைக்கு வெண்மைக் கலரையும், நடுவில் சிவப்புக் கலரையும் பயன்படுத்துங்கள். தவிர, பூணூல் ஒன்றைப் போட்டுக்கொண்டிருப்பது போலவும், வண்ணம் தீட்டி விடுங்கள். இப்பொழுது பாருங்கள், அழகான பிள்ளையார் அமர்க்களமாய் அமர்ந்திருப்பார். வண்ணம் காய்ந்தவுடன் வார்னிஷ் அடித்துவிடுங்கள். பிள்ளையார் அழகோடும் மினுமினுப்போடும் இருப்பார். மீண்டும் சொல்கிறேன், ஒரு முறைக்கு பல முறை படித்துச் செய்துபாருங்கள். எளிமையான பயிற்சிதான் இது.

என்ன வாசகிகளே, நான் சொல்வது போல் செய்துவிட்டீர்களா? உங்களுக்கு நீங்களே ஒரு சபாஷ் போட்டுக் கொள்ளுங்கள். விநாயகரின் உருவம் கொஞ்சம் மாறிவிட்டது என்று சொல்லும் வாசகிகள் கவலைப்படவேண்டும். முயற்சி செய்யுங்கள். முடிவில் வெற்றிகிட்டும். இது போல அதிக எண்ணிக்கையில் கொட்டைப்பாக்கு விநாயகரை உருவாக்கிக் கொள்ளுங்களேன். பிள்ளையார் சதுர்த்திக்கு வீட்டிற்கு வரும் உறவினருக்கும், நண்பருக்கும் இதைப் பரிசுப் பொருளாகக் கொடுக்கவும். முக்கியமாக நவராத்திரி விழாவில் இந்த ஆண்டு உங்கள் வீட்டின் முக்கியப் பரிசுப் பொருளாக இந்த கொட்டைப்பாக்கு விநாயகர் இருக்கும் என்று நம்புகிறேன். சந்தேகம் ஏதாவது ஏற்பட்டால், என்னைக் கேட்கலாம். ஆனால் அடுத்த மாதம் உங்களைச் சந்திப்பதற்குள் அனைவரும் இந்தப் பாடத்தை வெற்றிகரமாக முடித்துவிடவேண்டும். மீண்டும் சந்திப்போம், வேறொரு புதிய கைவினைக் கலையுடன். காத்திருங்கள்...



பெண்கள் பகுதி







